# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலை கலாசார பீடம் /புவியியற்துறை

## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2009/2010 (2014 March)

| | |
|---|---|
| **GEOS 4104:** மனிதவள அபிவிருத்தி<br>(Human Resource Development) | நேரம் 03 மணித்தியாலங்கள் |

- <u>எவையேனும் நான்கு</u>(04) வினாக்களுக்கு விடை தருக.
- எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

01. a. மனிதவளத்தை அளவீடு செய்யப் பயன்படுத்தப்படும் முக்கிய குறிகாட்டிகள் யாவை?
(03 புள்ளிகள்)

b. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மனிதவளத் திறன் விருத்தியில் பின்னடைந்து நிற்பதற்கான பிரதான காரணங்களைக் குறிப்பிடுக.
(09 புள்ளிகள்)

c. நீர் குறிப்பிட்ட யாதாவது ஒரு காரணி பற்றி சுருக்கமான விளக்கம் தருக.
(13 புள்ளிகள்)

02. a. மனிதவள முகாமைத்துவம் என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?
(03 புள்ளிகள்)

b. நாடொன்றின் மனிதவளம் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும் என்பதற்கு நீர் முன்வைக்கக் கூடிய காரணங்களை விளக்குக.
(10 புள்ளிகள்)

c. மனிதவளத்தின் மீது முதலீடு செய்வது எவ்வகையில் நன்மையளிக்கக் கூடியதாயிருக்கும் என்பதனைப் பொருத்தமான உதாரணங்களுடன் ஆராய்க.
(12 புள்ளிகள்)

03. a. ஊழியப்படை என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.
(05 புள்ளிகள்)

b. ஊழியப்படையின் பிரதான கூறுகள் யாவை?
(05 புள்ளிகள்)

c. இலங்கையில் ஊழியப்படையின் அண்மைக்கால வளர்ச்சிப்போக்கினை ஆராய்க.
(15 புள்ளிகள்)

04. a. இலங்கையில் மனிதவள அபிவிருத்தியின் பொருட்டு மத்திம, தாழ்மட்டங்களில மேற்கொள்ளப்பட்டுள்ள கல்விசார், தொழிற்பயிற்சிசார் முயற்சிகளை உதாரணங்கள் தந்து விளக்குக.

(12 புள்ளிகள்)

b. நாடொன்றின் மனிதவள அபிவிருத்தி முழுமைபெறாமைக்குத் தடையாகவுள்ள கல்விசார் பிரச்சினைகளை நுணுகி ஆராய்க.

(13 புள்ளிகள்)

05. a. ஆரோக்கியமான மனிதவளத்தின் பொருளாதார ரீதியான பங்களிப்பினை உதாரணங்கள் தந்து ஆராய்க.

(10 புள்ளிகள்)

b. "இலங்கையில் மனிதவள மேம்பாட்டில் சுகாதாரத்துறையின் சேவைகள் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்குகின்றன". இக்கூற்றினை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? உதாரணங்கள் தந்து ஆராய்க.

(15 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினுக்கு விளக்கக் குறிப்புத்தருக.

a. மனிதவளத்தின் தரத்தினைத் தீர்மானிக்கும் காரணிகள்
b. சந்தைப்பொருளாதார நாடொன்றில் தொழிற்படையைத் திட்டமிடலும், நடைமுறைப்படுத்தலும்
c. வளர்முக நாடுகளின் உற்பத்தி, மற்றும் சேவைத்துறைகளில் பெண்களின் பங்களிப்பு

(12.5x2 = 25 புள்ளிகள்)